# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 200 | வெள்ளிக்கிழமை Friday | 16.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# கவர்னர் அர்லேகருடன் முதலமைச்சர் விஜய் சந்திப்பு



தமிழ்நாட்டின் கவர்னராக இருந்த ஆர்.என். ரவி கடந்த மார்ச் மாதம் 5-ந்தேதி மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார்.அவருக்கு பதிலாக தமிழ்நாட்டுக்கு புதிய கவர்னர் நியமிக்கப்படவில்லை. மாறாக கேரள மாநில கவர்னர் ஆர்.வி.அர்லேகர் தமிழ்நாட்டின் பொறுப்பு கவர்னராக நியமனம் செய்யப்பட்டார். இவர்தான் முதல்-அமைச்சர்விஜய்க்குபதவிப்பிரமாணம் செய்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டுக்கு கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக முழுநேர கவர்னர் நியமிக்கப்படவில்லை.

இதற்கிடையே கடந்த ஆகஸ்டு மாதம் ஆந்திர மாநில முன்னாள் முதல்- மந்திரி கிரண் ரெட்டி தமிழகத்துக்கு கவர்னராக நியமிக்கப்பட இருப்பதாக பேசப்பட்டது. அப்போது பிரதமர் வெளிநாட்டு பயணத்தில் இருந்தார். அவர் வந்த பிறகு இது பற்றிய அறிவிப்பு வெளியாகலாம் என கூறப்பட்டது. ஆனால் அதற்கான அறிவிப்பு ஏதும் வெளியாகவில்லை.

இந்தநிலையில்தமிழ்நாடு உள்பட 6 மாநிலங்களுக்கு புதிய கவர்னர்களை நியமித்து ஜனாதிபதி திரவுபதி நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த உத்தரவின் படி தமிழ்நாட்டுக்கு கேரள கவர்னர் ஆர்.வி.அர்லேகரே புதிய கவர்னராக, அதாவது முழு நேர கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் மோடி சில தினங்களுக்கு முன்னர் ஒருநாள் பயணமாக தமிழகம் வந்திருந்தார். அதன்பின்னர் இந்த அதிரடி மாற்றம் நடந்திருந்தது.

முதல்-அமைச்சர் விஜய் வாழ்த்து

கவர்னர் அர்லேகருக்கு முதல்-அமைச்சர் விஜய் சமூக வலைத்தளம் மூலம் வாழ்த்து தெரிவித்தார். இதனிடையே, தமிழகத்தின் முழு நேர கவர்னராக அர்லேகர் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார். இந்த நிலையில், தமிழகத்தின் முழுநேர கவர்னராக பொறுப்பேற்றுள்ள அர்லேகரை முதல்-அமைச்சர் விஜய் சந்தித்துள்ளார். இதற்காக கிண்டி மக்கள் பவனுக்கு வந்த அவர், கவர்னர் அர்லேகரை சந்தித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

# 'மதத்தை காரணம் காட்டி இடஒதுக்கீட்டை மறுப்பதா?' சீராய்வு மனு தாக்கல் செய்ய மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை:

"இஸ்லாமை தழுவிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பிற்படுத்தப்பட்ட (BC) பிரிவுக்கான இட ஒதுக்கீடு அளிக்கத் தேவையில்லை என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக தமிழக அரசு உடனடியாகச் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, முஸ்லிமாக மதம் மாறியவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு வழங்கும் தமிழக அரசின் கொள்கையை உறுதி செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இந்நிலையில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கங்களில் பகிர்ந்த பதிவில், "இஸ்லாம் மதம் தழுவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டு உரிமையைக் காப்பாற்ற தமிழக அரசு உடனடியாகச் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

சமூகரீதியான பின்னடைவு (social backwardness) ஒரு நாளிலோ ஒரு தலைமுறையிலோ ஏற்படுவதல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்த சமூகக் கட்டமைப்பினால் அடைந்தது. மதம் மாறுவதாலேயே அது மறைந்துவிடுவதில்லை.

இதுவே சூக யதார்த்தமாக இருக்கும் நிலையில், "இஸ்லாமைத் தழுவிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு BC (M) பிரிவுக்கான இட ஒதுக்கீடு அளிக்கத் தேவையில்லை" எனும் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சமூகநீதிக்கு எதிரானது.

தமிழக அரசு உடனடியாக இத்தீர்ப்புக்கு எதிராக சீராய்வு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும். பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் இருந்து இசுலாம் மதத்தை ஏற்பவர்களின் இட ஒதுக்கீட்டு உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

கடந்த திராவிட மாடல் அரசில்,கிறித்தவர்களாக மதம் மாறும் ஆதி திராவிடர்களுக்கும் இட ஒதுக்கீடு அளிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள ஒன்றிய அரசை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றினோம். அந்த முயற்சிகளையும் தற்போதைய தமிழ்நாடு அரசு தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

சாதியினால் ஒடுக்குமுறையை எதிர்கொண்ட BC, MBC, SC மக்களுக்கு அதனையே அளவுகோலாகக் கொண்டு இட ஒதுக்கீடு அளிப்பதுதான் சமூகநீதிக்கு வழிவகுக்கும். பின்பற்றும் மதத்தைக் காரணம் காட்டி அந்த உரிமையை மறுப்பது சமூக அநீதியாக அமைந்துவிடும்." எனப் பதிவிட்டுள்ளார்.

# தமிழகத்தில் தொடங்கியது வடகிழக்கு பருவமழை: எங்கெல்லாம் மிக கனமழை, கனமழைக்கு வாய்ப்பு?

சென்னை: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (அக்.16) நீலகிரி, கோவை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் வி.ஆர்.துரை செய்தியாளர்களிடம் கூறியது: "நாடு முழுவதிலும் இருந்து தென்மேற்கு பருவமழை இன்று விலகியுள்ளது.இதன் விளைவாக, வடகிழக்குப் பருவமழையால் ஏற்படும் மழைப்பொழிவு தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால், கடலோர ஆந்திரப் பிரதேசம், ராயலசீமா, தெற்கு உள் கர்நாடகா, மற்றும் கேரளா மற்றும் மாஹே ஆகிய பகுதிகளில் தொடங்கியுள்ளது.



தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. இந்த காலக்கட்டத்தில் வட தமிழகத்தில் இயல்பை விட குறைவாகவும், தென் தமிழகத்தில் இயல்பை விட அதிகமாகவும், கடலோர தமிழகத்தில் இயல்பை ஒட்டியும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

கடந்தசெப்டம்பர் 30-ம் தேதியுடன் நிறைவடைந்த தென்மேற்கு பருவமழை காலத்தில் 21 சதவீதம் மழை குறைவாக கிடைத்துள்ளது. தென்மேற்கு பருவமழைக் காலத்தில் கடந்த 2012-ல் 23 சதவீதம், 2016-ல் 20 சதவீதம் மழைகுறைவாகபெய்துள்ளது.

தெற்கு கடலோர தமிழக பகுதிகளின் மேல் சுமார் 1.5 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. தெற்கு கடலோர தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து ஒடிசா கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் வரை, மத்திய மேற்கு மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் வழியாக சுமார் 1.5 கிமீ உயரம்வரை ஒருகாற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (அக்.16) நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல்,தென்காசி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில்இடி,மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும்.

ஈரோடு, திருப்பூர், விருதுநகர், கன்னியாகுமரி, ராமநாதபுரம், சிவகங்கை,கரூர்,அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, திருச்சி, நாமக்கல், தருமபுரி,கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணா மலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், புதுக்கோட்டை, ராணிப்பேட்டை, கடலூர், திருவள்ளூர் மற்றும் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில்ஒரிருஇடங்களில் கனமழை பெய்யக் கூடும். இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

17-ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல்,மதுரை,திருப்பூர், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம்,வேலூர்,ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர்,தஞ்சாவூர்,கடலூர்,ஈரோடு,தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ராமநாதபுரம், திருச்சி, திருநெல்வேலி, நாமக்கல் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில்மிதமானமழையும் பெய்யக்கூடும்.

18-ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில்ஒரிருஇடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில்மிதமானமழையும் பெய்யக்கூடும்.

19-ம் தேதி நீலகிரி, கோவை, திருவண்ணாமலை, நாமக்கல், திருப்பூர் மற்றும் மதுரை மாவட்டங்களில்ஒரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் மிதமான மழையும் பெய்யக்கூடும். 20-ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர் மற்றும் மதுரை மாவட்டங்களிலும், 21-ம் தேதி நீலகிரி கோவை,தேனிமாவட்டங்களிலும் ஒரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் மிதமான மழையும் பெய்யக்கூடும். ) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் காலை 8.30மணி வரையிலான 24மணிநேரத்தில்பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கரூர் மாவட்டம் தோகமலை, மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடில்தலா 11 செமீ, ராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம், நாகப்பட்டினம், மயிலாடுதுறைமாவட்டம்தரங்கம்பாடி, மருதம்பள்ளம், திருச்சி மாவட்டம் ஏழுப்பட்டியில் தலா 9 செமீ மழை பதிவாகியுள்ளது" என்று அவர் தெரிவித்துள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தவெக ஆட்சிக்கு வந்த பின்பு தான் தமிழகத்தில் அரிசி, பருப்பு உள்ளிட்ட பொருட்கள் விலைவாசி உயர்ந்துள்ளது, மின்வெட்டுப் பிரச்சனை உள்ளது

## தேனியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் "வீ த லீடர்ஸ்" அமைப்பு மாநில பொதுச்செயலாளர் கரு.நாகராஜன் விமர்சனம்



"வீத லீடர்ஸ்" அமைப்பு சார்பில் தேனியில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இதில் "வீத லீடர்ஸ்" அமைப்பின் மாநில பொதுச்செயலாளர் கரு.நாகராஜன் கலந்துகொண்டு கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார்

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய கரு.நாகராஜன்

உள்ளாட்சித் தேர்தலில் நாங்கள் போட்டியிடுவோம் என எங்கள் தலைவர் அண்ணாமலை அறிவித்துள்ளார், "வீ த லீடர்ஸ்" அமைப்பு விரைவில் அரசியல் கட்சியாக மாறும் தேர்தலில் போட்டியிடும்

தமிழகத்தில் குறைந்திருந்த வாக்குப்பதிவு சதவீதத்தை உயர்த்துவதற்கு எஸ்ஐஆர் தான் காரணம், அரசியல் சீர்திருத்தத்திற்கு நல்லது நடந்தால் அதை வரவேற்க வேண்டும் ஆனால் ராகுல் காந்தி அரசியலுக்காக போராட்டம் நடத்துகிறார்

தவெக ஆட்சியில் பல்வேறு பிரச்சனைகள் குறைபாடுகள் உள்ளது, அதனை நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம், அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டும் அதன் பின்பு விமர்சனம் செய்ய வேண்டும்

தமிழகத்தில் சட்ட ஒழுங்கு பிரச்சனை பெரிதாக உள்ளது, கொலை செய்பவர்களுக்கு பயம் இல்லை பெரும்பாலும் 18 வயதிற்கு கீழ் உள்ள சிறுவர்கள்தான் இதில் ஈடுபடுகிறார்கள், காவல்துறையை கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

தமிழகத்தில் மின்வெட்டு பெரிய பிரச்சினையாக உள்ளது, யூனிட்டுக்கு 35 ரூபாய் கொள்முதல் செய்வது மிகப்பெரிய தவறு, காற்றாலைகள் அமைத்து மின்சார உற்பத்தியை அதிகரிக்க முயற்சி செய்ய வேண்டும் தற்போதைய அரசு 35 ரூபாய்க்கு கொள்முதல் செய்தால் அடுத்து வரக்கூடிய அரசு 40ரூபாய், 50 ரூபாய்க்கு கொள்முதல் செய்வார்கள் இதனால் மக்களின் வரி பணம் தான் வீணாகும் ஆந்திராவிற்கு சென்ற முதலமைச்சர் விஜய், கேரளாவிற்கும் சென்று முல்லைப் பெரியாரின் உரிமையை பெற்று தர வேண்டும், கர்நாடக முதலமைச்சரை சந்தித்து மேகதாதுவில் அணை கட்டுவதை கைவிட வலியுறுத்த வேண்டும் தவெக ஆட்சிக்கு வந்த பின்பு தான் தமிழகத்தில் அரிசி, பருப்பு உள்ளிட்ட பொருட்கள விலைவாசி உயர்ந்துள்ளது, திமுகவை குறை சொல்வதை மட்டும்தான் தவெகபேசி வருகிறது, எனவே விலைவாசி குறைவை கட்டுப்படுத்த தவெக அரசுநடவடிக்கைஎடுக்க வேண்டும் என தெரிவித்தார்

# துணிக்குள் இருந்த நகையை திருப்பி கொடுத்தவருக்கு பாராட்டு



திருநாவலூர் கிராமத்தைச் சேர்ந்த சையத் காதர் அவர்களின் மகன் ஜானி, பழைய துணிகளை வாங்கி விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு சேந்தநாடு, உடையானந்தல், மாரனோடை பகுதிகளில் வீடுகளுக்குச் சென்று பழைய துணிகளை வாங்கியுள்ளார்.

வீட்டில்அடுக்கிவைக்கும் போது, ஒரு துணிக்குள் இருந்த 5 சவரன் தங்க நெக்லஸைக் கண்டறிந்துள்ளார். அந்த நகையைத் தன்வசம் வைத்துக்கொள்ளாமல், நேர்மையுடன் இன்று திருநாவலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. ராஜ்குமார் அவர்களிடம்ஒப்படைத்துள்ளார். இவரது நேர்மையும் மனிதநேயமும் நெஞ்சை நெகிழச் செய்கின்றன. இத்தகைய நேர்மையான செயலைப் பாராட்டும் விதமாக, We The Leaders – உளுந்தூர்பேட்டை தொகுதி சார்பில் ஜானி அவர்களுக்குச்சால்வைஅணிவித்து, இனிப்புகள் மற்றும் மரக்கன்று வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டோம். கே.பி. அழகு இளங்கோ, பி.நாகராஜ், ஜி மணிகண்டன் We The Leaders – உளுந்தூர்பேட்டை தொகுதி, கள்ளக்குறிச்சி மாவட்டம்

# அப்துல்கலாம் பிறந்தநாள் விழா: தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சார் ஆட்சியர் பரிசு



தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் அப்துல் கலாம் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சார் ஆட்சியர் ராகுல் குமார் தலைமை தாங்கி பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். பள்ளித்தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். மாணவி நந்தனா வரவேற்றார். பேச்சுப்போட்டியில் ஹாசினி, நவீன், ரித்திகா, கவிதைப் போட்டியில் பிரணவி, சர்வேஸ்வரன், விஜய கண்ணன், ஆகாஷ், நிகில், சுஜன், பொன்மொழிப் போட்டியில் ருத்ரேஸ்வரன், நித்திஷா, ஏஞ்சல், மாலினி ஆகியோர் வெற்றிபெற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கிய சார் ஆட்சியர் ராகுல் குமார் சிறப்புரையாற்றினார். ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை ஆசிரியைகள் சிவரஞ்சனி, ஆர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.

# மேலப்பாளையத்தில் ஆர்.ஆர்.மொபைல்ஸ் கடை திறப்பு விழா திமுக அப்துல் வஹாப்.வி.சி.க எம்.சி.சேகர்.த.வெ.க மரிய ஜாண் பங்கேற்பு



நெல்லை மாநகரம் மேலப்பாளையம் சந்தை ரவுண்டானா அருகே அம்பை சாலையில் ஆர்.ஆர்.மொபைல்ஸ் கடையின் மூன்றாவது கிளையின் திறப்பு விழா நடந்தது விழாவிற்கு ஆர்.ஆர். மொபைல்ஸ் கடையின் உரிமையாளர்கள் அ.பீரதீப்.அ.சுபாஷ் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்நிகழ்வில் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும் திமுக மத்தியமாவட்டபொறுப்பாளருமான மு.அப்துல்வஹாப். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நெல்லை சட்டமன்ற தொகுதியின் மாவட்ட செயலாளர்எம்.சி.சேகர். தமிழக வெற்றிக் கழகத்தின் நெல்லை மத்திய மாவட்ட செயலாளர் மரிய ஜாண். மனித நேய மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளரும் நெல்லை மாமன்ற உறுப்பினருமான கே.எஸ்.ரசூல்மைதீன். விசிக சமூக நல்லிணக்கப் பேரவையின் மாநில துணைச் செயலாளர் மேலப்பாளையம் கா.நடராஜன். பெருமாள்புரம் சமூக ஆர்வலர் ராஜா. விசிக பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியின் மாவட்ட செய்தி தொடர்பாளர் செ.பிரகாஷ் (எ) செண்பகப் செல்வன்.தமிழர் உரிமை மீட்புக் களம் தென்மண்டல அமைப்புச் செயலாளர் கணேசன் பாண்டியன்.பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியின் முதல்வர் பர்னாபாஸ் ஜேக்கப். ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஆர். ஆர். மொபைல்ஸ் கடை உரிமையாளர்கள் அ.பிரதீப். அ.சுபாஷ். குடும்பத்தினர்கள் கலந்துகொண்டுஅனைவரையும் வரவேற்றனர்



# கொட்டும் மழையிலும் குடைபிடித்து வெள்ள வடிகால் ஓடையை ஆய்வு செய்த மேயர் ஜெகன் பெரியசாமி

## 2023 வெள்ள பாதிப்பு மீண்டும் ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரம் அனைத்து வடிகால் வழித்தடங்களும் ஆய்வு

தூத்துக்குடியில் கடந்த 2023-ம் ஆண்டு ஏற்பட்ட பெருமழை மற்றும் காட்டாற்று வெள்ளத்தால் ஏற்பட்டபாதிப்புகள் மீண்டும் நிகழாமல் தடுக்கும் வகையில், மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள வெள்ளத் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தீவிரமாகக் கண்காணித்து வருகிறார். இதன் ஒரு பகுதியாக, கொட்டும் மழையிலும் குடைபிடித்தபடி வெள்ள நீர் வடிகால் ஓடையான உப்பாற்று ஓடையை நேரில் பார்வையிட்டு, தண்ணீர் தடையின்றிச் செல்வதை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

தமிழகத்தில் வடகிழக்குப்பருவமழைதொடங்கியுள்ள நிலையில், தூத்துக்குடிமாநகரப்பகுதியில் மழைநீர் தேங்காமல் வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் குறித்து மாநகராட்சி நிர்வாகம் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது.

கடந்த 2023-ம் ஆண்டு பெய்த கனமழையால் காட்டாற்று வெள்ளம் தூத்துக்குடி மாநகரப் பகுதிக்குள் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. பல வீடுகள் மழைநீரில் மூழ்கின. ஆயிரக்கணக்கான வாகனங்கள் தண்ணீரில் சிக்கி சேதமடைந்தன. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இந்த அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படாமல் தடுப்பதற்காகமாநகராட்சி நிர்வாகம் பல்வேறு வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் மழைநீரை வெளியேற்றுவதற்காக ஏற்கெனவே இருந்த மூன்று முக்கிய வடிகால் வழித்தடங்கள், தற்போது 14 வடிகால் வழித்தடங்களாக விரிவுபடுத்த ப்பட்டுள்ளதாக மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகரப் பகுதிகளில் பெய்யும் மழைநீர் விரைவாக வெளியேறவும், அதிக அளவில் மழை பெய்தாலும் குடியிருப்புப் பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்கவும் பல்வேறு வடிகால் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வழித்தடங்கள் முறையாகச் செயல்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதிலும் மாநகராட்சி நிர்வாகம் கவனம் செலுத்தி வருகிறது.

தூத்துக்குடியின் வெளிப்புறப் பகுதிகளான கயத்தாறு, கழுகுமலை, ஒட்டப்பிடாரம், புதியம்புத்தூர், புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் பெய்யும் மழைநீர் உப்பாற்று ஓடை வழியாகக் கோரம்பள்ளம் குளத்துக்குச் சென்று, அங்கிருந்து கடலைச் சென்றடைவது வழக்கம்.

இந்த நிலையில், உப்பாற்று ஓடையில் மழைநீர் தடையின்றிப் பாய்வதை உறுதி செய்வதற்காக ஓடையில் வளர்ந்திருந்த முட்செடிகள் அகற்றப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. வெள்ளநீர் சீராகச் செல்வதற்கான வழித்தடங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் முறையாக முடிக்கப்பட்டு ள்ளனவா, மழைநீர் செல்லும் வழியில் எங்காவது அடைப்பு உள்ளதா, தண்ணீர் தேங்கும் நிலை உள்ளதா என்பதை நேரில் ஆய்வு செய்வதற்காக மேயர் ஜெகன் பெரியசாமி இன்று கொட்டும் மழையிலும் குடைபிடித்தபடி உப்பாற்று ஓடை மற்றும் அதன் நீர்வழித்தடங்களைப் பார்வையிட்டார்.

அப்போது, மழைநீர் தடையின்றிச் செல்வதை உறுதி செய்யவும், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்கவும் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

அவர் தெரிவிக்கையில், 2023-ம் ஆண்டுக்குப்பிறகு 2024-ம் ஆண்டு சிறப்பாக இருந்ததாகவும், 2024, 2025 ஆகிய ஆண்டுகளில் மழை பெய்தபோதும் அதுபோன்ற பாதிப்புகள் ஏற்படவில்லை என்றும் மேலும், இந்த ஆண்டும் வெள்ளப் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் சிறப்பாகமேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மேலும் கடந்த சில மாதங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில், தற்போது பெய்து வரும் மழை தூத்துக்குடி மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. அதே நேரத்தில், தொடர்ந்து கனமழை பெய்து மீண்டும் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளநீர்புகுந்துவிடுமோ என்ற அச்சமும் பொதுமக்களிடையே நிலவுகிறது.

எனவே, மழைநீர் வடிகால் வழித்தடங்களைத் தொடர்ந்து கண்காணித்து, அடைப்புகள் ஏற்படும் இடங்களில் உடனடியாகச் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு, வருகிறது என்று தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்.

# சாதிய மோதல்களைத் தூண்டும் வகையில் கருத்து தெரிவிப்போர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நம் நாடு நம் மக்கள் நம் எதிர்காலம் கட்சி பொதுச் செயலாளரும் வழக்கறிஞர் அருணாதேவி ரமேஷ் பாண்டியன் மாவட்ட ஆட்சியரிடம் மனு



சாதிய மோதல்களைத் தூண்டும் வகையில் கருத்து தெரிவிப்போர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்: தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் நம் நாடு நம் மக்கள் நம் எதிர்காலம்கட்சிபொதுச் செயலாளரும்வழக்கறிஞர் அருணா தேவி ரமேஷ் பாண்டியன் மனு அளித்தார். தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் சாதிய உணர்வைத் தூண்டி, சாதிய மோதல்களை உருவாக்கும் வகையில் கருத்துகளைத் தெரிவிப்போர் மீது உரிய விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கைஎடுக்க வேண்டும் என வலியுறுத்தி, நம் நாடு நம் மக்கள் நம் எதிர்காலம் கட்சியின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

அக்கட்சியின் பொதுச் செயலாளரும்வழக்கறிஞருமான அருணா தேவி ரமேஷ் பாண்டியன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: முன்னாள் முதல்வர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினராக மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த ரோச் விக்டோரியா இருந்தார். அதேபோல், தற்போதைய தமிழக முதல்வர் விஜய் தலைமையிலான ஆட்சியில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீநாத் அமைச்சராக உள்ளார்.

இந்நிலையில், சில அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தூத்துக்குடி மற்றும் தென் மாவட்டங்களில் சாதிய மோதல்களை உருவாக்கும் வகையில் சமூக வலைதளங்கள் உள்ளிட்ட பல்வேறு தளங்களில் கருத்துகளைத் தெரிவித்து வருவதாகக் குற்றம்சாட்டினார்.

அமைதிப் பூங்காவாகத் திகழும் தென் மாவட்டங்களில் சாதிய உணர்வைத் தூண்டும் வகையில் பேசி, சமூக அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் குந்தகம் விளைவிப்போர் மீது மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை நடத்தி, சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நம் நாடு நம் மக்கள் நம் எதிர்காலம்கட்சிபொதுச் செயலாளர், வழக்கறிஞர் அருணா தேவி ரமேஷ் பாண்டியன் வலியுறுத்தினார்.

# ஆவின் பால் தட்டுப்பாட்டை போக்க தமிழக அரசு நடவடிக்கை: மு.வீரபாண்டியன் வலியுறுத்தல்



சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ஆவின் பால் தட்டுப்பாட்டை போக்கிட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ஆவின் பால் பாக்கெட்டுகளின் விநியோகம் 10 விழுக்காடு முதல் 15 விழுக்காடு வரை குறைக்கப்பட்டுள்ளது. ஆவின் பச்சை பால் தட்டுப்பாடு தமிழ்நாடு முழுவதும் அதிகரித்துள்ளது. அண்மைக் காலமாக ஆவின் பால் வாங்கும் வாடிக்கையாளர்களிடம் "ஆதர் அட்டை" வழங்க வேண்டும் என கெடுபிடி காட்டப்படுகிறது. ஆதார் கார்டு வழங்காதவர்களுக்கு பால் இல்லை என மறுக்கப்படுகிறது. ஆவின் பால் விற்பனை செய்யும் சிறு கடைகளுக்கு, ஆவின் பால் அளவு குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ஆவின் பால் வாங்கும் பொதுமக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, தமிழ்நாடு அரசு உடனடியாகத் தலையிட்டு இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். ஆவின் பால் தட்டுப்பாட்டை போக்க வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தென்காசியில் 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் தர்ணா போராட்டம்



தென்காசியில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறைஅலுவலர்கள் சங்கம் சார்பில் 18 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று மாலை நேர தர்ணா போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் விருதுநகரில் நடைபெற்ற 12ஆவது மாநில மாநாட்டு தீர்மானத்தின் அடிப்படையில் 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று தென்காசியில் நடைபெற்ற மாலை நேர தர்ணா போராட்டத்திற்கு தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் மா. மாணிக்கவாசகம் தலைமை தாங்கினார். மாவட்டத் துணைத் தலைவர் அ. முத்துக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார் மாவட்ட செயலாளர் அ.கணேசன் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் முன்னாள் மாநிலதுணைத்தலைவர் வெ. சண்முகசுந்தரம் துவக்க உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் தோழமை சங்கங்களின் நிர்வாகிகள் க.சுப்பிரமணியன், க.பழனி, க.கங்காதரன், பா.கோவில் பிச்சை, என். நாராயணன், எம்.மணிமேகலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் இந்த தர்ணா போராட்டத்தில் மாநிலத் தலைவர்

இரா.இராமநாதன் நிறைவுறை ஆற்றினார்.

இந்த தர்ணா போராட்டத்தில் சங்கத்தின் நிர்வாகிகள் பேசும்போது:-

நீண்ட காலமாக கிடப்பில் இருந்த பதிவுறு எழுத்தர்களுக்கு பணிவரன் முறை, உதவி இயக்குனர் பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை நாம் வென்றெடுத்து இருக்கிறோம். இதர கோரிக்கைகளையும் வென்றெடுக்க நாம் அடுத்த கட்ட போராட்டங்களை மிக சக்தியாக எழுச்சியோடு நடத்த வேண்டி உள்ளது..

ஊராட்சி செயலாளர்களுக்குஅரசு ஊழியர்களுக்குவழங்குவதுபோல் ஒய்வூதியம்,

தேர்வு நிலை, சிறப்பு நிலை, மருத்துவ காப்பீடு உள்ளிட்ட உரிமைகளையும், சலுகைகளையும் வழங்குதல், கணினி உதவியாளர்களை தட்டச்சர் நிலையில் காலமுறை

ஊதியத்தில் பணி வாய்ப்பு வழங்குதல், முழு சுகாதார திட்ட ஊழியர்களை SBM(G) திட்டத்தில் ஈர்த்து கொள்ளுதல், மக்கள் நலப் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியத்தில் நிரந்தரம் செய்தல், 10 ஆண்டுகள் பணி முடித்த ஒன்றிய பணி மேற்பார்வையாளர்களுக்கு இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு உதவி செயற்பொறியாளர் வீதம் பணிப்பகிர்வினை வழங்கி உதவிப்பொறியாளர் / இளநிலைப்பொறியாளர் நிலையில் பதவி உயர்வு வழங்குதல், 100 நாள் வேலை திட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் தனி ஊழியர் கட்டமைப்பை உருவாக்குதல், ஊழியர்கள் மீது நீண்ட நாள் நிலுவையில் உள்ள குற்றச்சாட்டு குறிப்பாணைகள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இறுதி உத்தரவு பிறப்பித்தல், பிஎம்ஏஒய் தொடர்பான விழிப்புத்துறை குற்றச்சாட்டுகளுக்கு துறைரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு இறுதி உத்தரவு பிறப்பித்தல், 100 நாள் வேலை திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியினை உடனடியாக விடுவித்தல், 100 நாள் வேலைதிட்டத்தில்பணிபுரியும் அனைத்து நிலை ஊழியர்களுக்கும் சிபிஎஸ்இ திட்டத்திற்கான ஊழியர் பங்களிப்பு நிதியினை உடனடியாக ஒரே நேரத்தில் வழங்கி அவரவர் கணக்கில் வரவுவைத்தல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆபரேட்டர்,துப்புரவு பணியாளர், தூய்மைகாவலர்களுக்கு முறையான ஊதியம் மாதந்தோறும் வழங்குவதை உறுதி செய்தல் உள்ளிட்ட 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள் இந்த தர்ணா போராட்டத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறைஅலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் மு.ஜெயலட்சுமி,மாவட்டத் துணைத் தலைவர்கள் வி.சுப்புராஜ்,ந.ஆறுமுகம், எம்.செல்வம் ந. காசிபாண்டி, ச.அந்தோணி ரா. செல்வம், மாவட்ட இணைச் செயலாளர்கள் வி.முனியப்பா,ரா.வெள்ளப்பாண்டி, ச.பவுன்ராஜ் மு.கனகசபாபதி, சி. ராஜேந்திரன், ஜேசுதாசன், பி.சைலேஷ், ரா.ராஜேஸ்வரி என்ற சந்திரமதி, மாவட்ட தணிக்கையாளர்கள் கே. கருப்பையா, சு.ராஜா, மாவட்ட மகளிர்துணைக் குழு அமைப்பாளர் சி.குழந்தை மணி மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முடிவில் மாநில செயற்குழு உறுப்பினர் சி. பழனி அனைவருக்கும் நன்றி கூறினார்.



# ஆற்காட்டில் ஏ.பி.ஜே. அறக்கட்டளை சார்பில் 950 மரக்கன்றுகள் வழங்கல்

## மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு!

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு: இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களின் 95-வது பிறந்தநாளை முன்னிட்டு, ராணிப்பேட்டை மாவட்டம்,ஆற்காட்டில் உள்ள தனியார் பள்ளியில் ஏ.பி.ஜே. அறக்கட்டளை சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஏ.பி.ஜே. அறக்கட்டளைத் தலைவர் கோபி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சுமார் 950 மரக்கன்றுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இதில், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம். சுகுமார் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார். மேலும், பள்ளியின் தலைவர் பக்தவத்சலம், செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, தலைமை ஆசிரியர் லதா, நகரச் செயலாளர் சங்கர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். மரம் வளர்ப்பதன் அவசியத்தையும்,சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் மாணவர்களுக்கு உணர்த்தும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

# ஹமீதியா மசூதிக்குள் அத்துமீறி உள்ளே புகுந்து நிர்வாகிகள் மீது தாக்குதல் மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி தலைவர் காயல் அப்பாஸ் கடும் கண்டனம்





ஹமீதியா மசூதிக்குள் அத்து மீறி உள்ளே புகுந்து நிர்வாகிகள் மீது நடத்த பட்ட தாக்குதலுக்கு - மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சிதலைவர்காயல்அப்பாஸ் கடும் கண்டனத்தை தெரிவித்து உள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

சென்னை:கோடம்பாக்கத்தில் அமைந்துள்ள உள்ள ஹமீதியா மசூதியின் அதிகாலை சுமார் 4.30 மணி அளவில் ஒருவர் பூட்டை உடைத்து அத்துமீறி உள்ளே நுழைந்து குரானை கிழித்தும் பொருட்களையும் அடித்து நொக்கியும் மசூதியின் நிர்வாகிகள் மீது கொடூரமாக தாக்குதல் நடத்தியும் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பெண் காவல் உதவி ஆய்வாளரை இழிவாக பேசியும் உடன் இருந்த நான்கு காவல் துறையினர்கள் மீதும் தாக்குதல் நடத்தியும் அராஜகத்தில் ஈடு பட்ட இச்சம்பவம் இஸ்லாமியர்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தி வருகிறது.

மேலும். கடந்த மூன்று ஆண்டுக்கு முன்பு தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகாலையில் மசூதிக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து பாங்கு சொல்ல கூடாது ஜெய் ஸ்ரீராம் சொல்ல சொல்லி கட்டாய படுத்தியும்ஹசரத் மற்றும் நிர்வாகிகள் மீதும் தாக்குதல் நடத்திய ராணுவ வீரர் மீது வழக்கு பதிவு செய்து உடனடியாக காவல் துறையினர் கைது

செய்தனர். என்பது குறிப்பிடதக்கது. மேலும். அச்சம்பவம் போன்றும் கோடம் பாக்கத்தில் மசூதியின் உள்ளே அத்து மீறி நுழைந்து அராஜகத்தில் ஈடு பட்ட சம்பவத்தை வைத்து பார்க்கும் போது அமைதி பூங்காவான தமிழகத்தில் மதகலவரத்தை நிகழ்த்ததிட்டம்திட்ட படுகிறதா என்கிற சந்தேகம் எழுகிறது ? ஆகவே . சமூக நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் இது போன்ற நபர்களை உளவுத்துறை அதிகாரிகள் முழுமையாக கண்காணிக்க வேண்டும் என கேட்டு கொள்கிறோம்.

எனவே : கோடம் பாக்கம் மசூதிக்குள் அத்து மீறி நுழைந்து அராஜகத்தில் ஈடு பட்ட நபர் மீது வழக்கு பதிந்து உடனடியாக கைது செய்து கடுமையானதண்டனைக்கு உள்ளாக்க பட்டு சிறை படுத்த வேண்டும். மேலும் ஒரு தனிநபர் இவ்வளவு துனிவாக மசூதிக்குள் அத்து மீறி நுழைந்து அராஜகத்தில் ஈடுபடுகிறார் என்றால் இவரை துண்டி விட்டது யார் பின்னனியில் யாரேல்லாம் இருக்கின்றார்கள் என்பதை பல்வேறு கோனத்தில் காவல் துறையினர் விசாரணை செய்ய வேண்டும். ஆகவே இனி வரும் காலங்களில் இது போன்ற சம்பவங்கள் நடை பெறாமல் தடுக்கும் வகையில் தமிழக முதல்வர் ஜோசப்,விஜய் மற்றும் காவல் துறை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால் அவர்களும் தகுந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி சார்பில் வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

# சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் மாணவர்களுக்கு போதிக்கும் திறனுக்கு 20% விழுக்காடு செய்முறை மதிப்பெண் வழங்க வேண்டும்

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் கோரிக்கை



கடந்தமேமாதம் உச்சநீதிமன்றம் பணியில் இருக்கும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயம் தகுதித் தேர்வு எழுதி தேர்ச்சி அடைய வேண்டும் அப்படி தேர்ச்சி அடைந்தால் மட்டுமே பணி தொடமுடியும் என்றும் அதாவது ஒய்வு பெற 5 ஆண்டிற்குள் இருந்தால் தகுதி தேர்வில்இருந்துவிலக்கு அளித்தும் ஒய்வுபெற 5 ஆண்டுற்கு மேல் இருந்தால் அவர்கள் தகுதி தேர்வில் கட்டாயம் தேர்ச்சி அடைய வேண்டும் என்றும் மூன்று ஆண்டிற்குள் தேர்ச்சி அடைய வேண்டும் என்று கால அவகாசத்தை நிர்ணயத்து உத்தரவு பிறப்பித்தது இந்த நிலையில் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்து ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகிகளை அழைத்து கருத்துக்கள் ஆலோசனைகளை கேட்டறிந்தார்கள் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் உள்ளிட்ட ஒட்டுமொத்த ஆசிரியர் சங்கங்களும் பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு தனியாக சிறப்பு ஆசிரியர் தகுதி தேர்வை நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர் எவ்வாறெல்லாம் வினாக்கள் கேட்கப்படவேண்டும்மதிப்பெண்கள் எப்படி பட்டியலிட பட வேண்டும் என்றெல்லாம் விவாதிக்கப்பட்டது , சென்ற ஆட்சியில் தேர்வு எழுதும் அனைத்து ஆசிரியர்களுக்கும்தகுதி தேர்வில் இட ஒதுக்கீடு பின்பற்ற வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட சங்கங்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் விதிமுறையில் மாற்றம் செய்து இட ஒதுக்கீட்டை பின்பற்றி தேர்வு நடத்த ஆணையிட்டு பொது பிரிவினருக்கு 90 மதிப்பெண்ணும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 75 மதிப்பெண்ணும் ஆதிதிராவிடர் , அருந்ததியர் மற்றும் மாற்று திறன் ஆசிரியர்களுக்கு 60 மதிப்பெண் என்று மதிப்பெண் நிர்ணயிக்கப்பட்டு தேர்வு நடைப்பெற்றது இதன் விளைவாக பணியாற்றும் பல ஆசிரியர்கள் தேர்ச்சி அடைந்தனர் என்பதை அனைவும் அறிவார்கள் , அதனை தொடர்ந்து தற்போதைய அரசும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு தனியாக சிறப்பு ஆசிரியர் தகுதி தேர்வை அறிவித்து

கடந்த ஜூன் மாதம் 4 மற்றும் 5ஆம் தேதிகளில் தாள் ஒன்று தாள் இரண்டு நடபெறும் என்று அறிப்பு செய்யப்பட்டது இந்த அறிவிப்பை வரவேற்று தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்ட மைப்பு சார்பில் நன்றி தெரிவித்தோம் தேர்வும் நடந்தது இடைநிலை ஆசிரியர்களுக்கு தாள் ஒன்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தாள் இரண்டுஎன இரண்டு நாட்கள் தேர்வு நடத்தப்பட்டது, சிறப்பு தகுதி தேர்வாக இல்லாமல் மிகவும் கடினமாக வேலை நாடுனருக்கான தேர்வை காட்டிலும் மிகவும் கடினகாக இருந்தது 95% விழுக்காடு வினாக்கள் பாடப்பரிவில் கேட்கப்படாமல் வெளியில் இருந்து கேட்கப்பட்டதால் தேர்வு மிகவும் கடினமாக இருந்ததுதேர்வு எழுதிய ஒட்டுமொத்த ஆசிரியர்களும் மிகுந்த அதிர்ச்சியும் வேதனை அடைந்தார்கள் இது எதைகாட்டுகுறது என்றால் ஓட்டபந்தைய போட்டியில் ஒரு விளையாட்டும் வீரர் 100 மீட்டரை கடக்க 10 வினாடிகளில் கடந்தால்தான் வெற்றிபெற்றவராக அறிவிக்க முடியும் என்ற விதிய ஏற்படுத்தி வெற்றி பெற்றவராக அறிவித்து பதக்கம் பெறுவார் இதே நிலையில் அவருக்கு பயிற்சி அளிக்கும் பயிற்சியாளர் பயிற்சியாளராகதொடரவேண்டுமானால் 100 மீட்டர் ஓட்ட பந்யத்தை ஏற்கனவே விளையாட்டு வீரர்க ளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட10 வினாடிக்குள் இலக்கை அடைந்தால் தான் பயிற்சியாளராக தொடரமுடியும் என்பதை போன்று சிறப்பு தகுதித்தேர்வு வினாக்கள் இருந்தது என்பதை உண்மை இந்த உதாரணத்தை முன்வைத்து தான் ஆலோசனை கூட்டத்தில் சிறப்பு தகுதித் தேர்வு எழுதும் ஆசிரியர்களுக்கு மாணவர்களுக்கு பாடம் நடத்து கின்ற திறனை கண்டறிந்து செய்முறைதேர்வுற்கு 20% விழுக்காடு மதிப்பெண்ணும் பணிமூப்பிற்கு 5% விழுக்காடு மதிப்பெண்ணும் வழங்க வேண்டும் இடைநிலை ஆசிரியர்களுக்கு 75% விழுக்காடு பாடத்திட கேள்விகள் கேட்கப்பட வேண்டும் என்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாணவர்களுக்கு பயிற்றவிக்கும் பாடத்திட்டத்தில் இருந்து 75% விழுக்காடுகள் கேல்விகள் கேட்கபட வேண்டும் என்றும் இது வேலை நாடுநருக்கான தேர்வு இல்லை என்பதால் ஒரே சராசரியான மதிப்பெண் வழங்கி தேர்ச்சியை அறிவிக்க வேண்டும் அல்லது அனைத்து பிரிவினருக்கும் 5% விழுக்காடு மதிப்பெண் குறைக்க வேண்டும் என்று ஆலோசனை கூட்டத்தில் கேட்டுக்கொண்டோம் அதனையே மீண்டும்நினைவூட்ட கடமைப்பட்டு இருக்கிறோம் இனிவரும் சிறப்பு தகுதி தேர்வில் தமிழ்நாடு அரசு ஊழியரகள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் கோரிக்கையை நிறைவேற்று வார் என்ற நம்பிக்கையோடு ,நிறைவேற்றிட பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ஆ.ராஜ்மோகன் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் சா.அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு

# உருவ பொம்மையை எரிப்பது தண்டனைக்குரிய குற்றமல்ல: உயர்நீதிமன்றம் கருத்து

திருச்சி மாவட்ட தமுமுக மாவட்ட பொருளாளர்ராஜா,உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசை கண்டித்தும், உடனடியாக காவிரி மேலாண்மை வாரியம் அமைத்து தமிழகத்திற்கு உரிய காவிரி நீர் வழங்கக் கோரி கடந்த 2018-ல் திருச்சி கண்டோன்மெண்ட் பகுதியில் போராட்டம் நடத்தப்பட்டது.

இப்போராட்டத்தால் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இருப்பினும் நான் உட்பட 7 பேர் மீது திருச்சி கண்டோன்மென்ட்போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை நீதிபதி ஆர்.விஜயகுமார் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில்,ஜனநாயக அடிப்படையில் விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தப்பட்டது. ஆனால் கடு-



மையான சட்ட பிரிவுகளில்வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமைகளுக்கு போராடும் மக்கள் மீது இது போன்ற பிரிவுகளில்வழக்குபதிவு செய்யக்கூடாது என ஏற்கனவே பல்வேறு உத்தரவுகள் உள்ளன எனக் கூறப்பட்டது.

அரசு தரப்பில், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக உருவ பொம்மைகள் எரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். வழக்கை ரத்து செய்யக் கூடாது எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவு: இந்த வழக்கில் சாட்சிகள் அனைவரும் காவல் துறை அதிகாரிகளாக உள்ளனர்.

பொதுமக்கள் யாரும் சாட்சியாகக் காட்டப்படவில்லை. மனுதாரர்கள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்றோஅல்லதுபொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தனர் என்றோ எந்த ஒரு குற்றச்சாட்டும் இல்லை.

இது ஒரு ஜனநாயக முறையிலான போராட்டமாகும். வெறும் உருவ பொம்மையை எரிப்பது மட்டுமே இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகாது.

எனவே, மனுதாரர்களுக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்வது சட்டத்தின் செயல்முறையைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு மட்டுமே வழிவகுக்கும். எனவே, வழக்கு ரத்து செய்யப்படுகிறது என உத்தரவிட்டார்.

# பாகிஸ்தானில் பள்ளி மேற்கூரை இடிந்து விழுந்து 17 மாணவர்கள் பலியான சோகம்



பாகிஸ்தானில் பள்ளி மேற்கூரை இடிந்து விழுந்ததில் 17 மாணவர்கள் பலியானார்கள்.

பாகிஸ்தானின் வடமேற்கேபெஷாவர்நகரில் திர் காலனி பகுதியில் பள்ளிக்கூடம் ஒன்று வழக்கம்போல் இன்று காலை செயல்பட்டது. அப்போது, அதன் மேற்கூரை திடீரென்று இடிந்து விழுந்தது.

இதில், பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் பலர் சிக்கி கொண்டனர். பலத்த காயமடைந்த அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

17 மாணவர்கள் பலி

எனினும், ஆசிரியர் உள்பட 17 மாணவர்கள் பலியாகி உள்ளனர். 40-க்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர். பலியான மாணவர்கள் அனைவரும் 13 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

சிகிச்சை பெறுபவர்களில் பலரின் நிலைமை கவலைக்குரிய வகையில் உள்ளது. அதனால் பலி எண்ணிக்கைஅதிகரிக்ககூடும்என அஞ்சப்படுகிறது.

இந்த சம்பவத்திற்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை. மீட்பு மற்றும் நிவாரண பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஸ்ரீ கிருஷ்ணா மஹாலில் தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.10.2026) துவக்கி வைத்து, தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டையினை வழங்கினார்.



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஸ்ரீ கிருஷ்ணா மஹாலில் தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.10.2026) துவக்கி வைத்து, பார்வையிட்டார்.



ஈரோடு மாவட்டம், சோலார் பகுதியில் உள்ள சரவணா மஹாலில் வீடுகளுக்கு மானியத்துடன் கூடிய சோலார் பேனல் அமைப்பது குறித்த சிறப்பு சேவா சேது முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (15.10.2026) நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம், சோலார் பகுதியில் உள்ள சரவணா மஹாலில் நடைபெற்ற வீடுகளுக்கு மானியத்துடன் கூடிய சோலார் பேனல் அமைப்பது குறித்த சிறப்பு சேவா சேது முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமியிடம் மின் இணைப்புக்கான கோரிக்கை மனுவினை பொதுமக்கள் நேற்று (15.10.2026) வழங்கினார்கள்.

# அமெரிக்காவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 11%, இறக்குமதி 26% உயர்வு



புதுடெல்லி: இந்தியா - அமெரிக்கா இடையே தடையற்ற வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் நிலையில், நடப்பு நிதியாண்டின் முதல் பாதியில் அமெரிக்காவுக்கான இந்தியாவின் ஏற்றுதி 11 சதவீதமும், இறக்குமதி 26 சதவீதமும் உயர்ந்துள்ளது.

இது தொடர்பாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ஏப்ரல் - செப்டம்பர் 2026 காலகட்டத்தில் அமெரிக்காவுக்கான இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி 11.1% சதவீதம் அதிகரித்து, 50.81 பில்லியன் டாலரை எட்டியுள்ளது. அதேநேரத்தில், இதே காலகட்டத்தில் அமெரிக்காவிடம் இருந்து மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி 26% உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் 45.73 பில்லியன் டாலராக இருந்த அமெரிக்காவுக்கான ஏற்றுமதி தற்போது 50.81 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. அதேபோல், அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி 25.66 பில்லியன் டாலரிலிருந்து 32.33 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.

வரி தொடர்பான நிச்சயமற்ற சூழல் நிலவினாலும், இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் தொடர்ந்து விரிவடைந்து வருவதை இந்த புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

மேலும், அமெரிக்கா உடனான இந்தியாவின் சரக்கு வர்த்தக உபரி முந்தைய ஆண்டில் 20.07 பில்லியன் டாலராக இருந்த நிலையில் அது தற்போது 18.48 பில்லியன் டாலராக குறைந்துள்ளது. இதன் மூலம், இந்தியாவின் சரக்கு ஏற்றுமதிக்கான மிகப்பெரிய சந்தையாக அமெரிக்கா தொடர்ந்து நீடிக்கிறது. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வர்த்தகத் துறை செயலாளர் ராஜேஷ் அகர்வால், "இந்தியா - அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் சரியான திசையில் முன்னேறி வருகின்றன. நாம் சாதகமான நிலையில் இருக்கிறோம்.

இந்த ஒப்பந்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர இரு நாடுகளும் இணைந்து பணியாற்றி வருகின்றன. எனவே, ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்து கையெழுத்திடுவோம்.

ஒட்டுமொத்த வரி கட்டமைப்பும் முறைப்படுத்தப்படும் போதுதான் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியும். அமெரிக்காவில் பிரிவு 301-ன் கீழ் வரி கட்டமைப்பை மறுசீரமைக்கும்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்திய ஏற்றுமதியாளர்கள் மற்ற நாடுகளுடன் திறம்பட போட்டியிடுவதை உறுதி செய்ய, அமெரிக்கச் சந்தையில் முன்னுரிமையைப் பெற இந்தியா முயல்கிறது.

ஒரு வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்யும்போது, அது இருதரப்பு சந்தைகளிலும் நுழைவதற்கான வாய்ப்பை வழங்குவதோடு, குறிப்பிட்ட சந்தைகளில் முன்னுரிமை அடிப்படையிலான சந்தை அணுகலையும் வழங்குகிறது. தமது போட்டியாளர்களைக் காட்டிலும் இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய இந்த முன்னுரிமை சந்தை அணுகல், புதிய சுங்க வரி கட்டமைப்பின் ஒரு,, பகுதியாக அமையும்" என தெரிவித்தார்.

# அரிசி விலை உயர்வுக்கு காரணம் என்ன? அமைச்சர் வெங்கட்ரமணன் விளக்கம்



சென்னை: "கர்நாடக பொன்னி, ஆந்திர பொன்னி அரிசியின் வரத்து குறைவாக உள்ளது.இதனால் அரிசியின் விலை உயர்ந்துள்ளது. மக்கள் சன்ன ரக அரிசியை அதிகம் பயன்படுத்துகிறார்கள்" என உணவுத் துறை அமைச்சர் வெங்கட்ரமணன் தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் வெங்கட்ரமணன், "அரிசி விலை 2021-ல் ரூ.47 ஆக இருந்தது, 2023ல் ரூ.53 ஆகவும், 2025-ல் ரூ.60 ஆகவும், இப்போது ரூ.62 ஆகவும் உள்ளது. துவரம் பருப்பு விலை 2021-ல் ரூ.111 ஆகவும், 2023-ல் ரூ.148 ஆகவும் இருந்தது, 2024-ல் ரூ.171 ஆக உயர்ந்தது. திமுக ஆட்சியில் இருந்தபோது விலைவாசி உயர்வு குறித்து அவர்கள் மக்களின் கோரிக்கைகளை கேட்கவே இல்லை.

இப்போது தமிழகத்தில் 2 கோடியே 28 லட்சம் குடும்ப அட்டைகள் உள்ளன. அந்த அட்டைகளுக்கு தடையின்றி பொருட்கள் வழங்கப்படுகிறது. தமிழகம் முழுவதும் உள்ள அமுதம் அங்காடிகள், கூட்டுறவு சங்க கடைகளில் பொன்னி புழுங்கல் அரிசி ரூ.60-க்கும், துவரம் பருப்பு ரூ.130-க்கும் வழங்குகிறோம்.

கர்நாடக பொன்னி, ஆந்திர பொன்னி அரிசியின் வரத்து குறைவாக உள்ளது. இதனால் அரிசியின் விலை உயர்ந்துள்ளது. மக்கள் சன்ன ரக அரிசியை அதிகம் பயன்படுத்துகிறார்கள். சட்டப்பேரவையில் முதல்வரும் சன்னரக நெல்லுக்கு அதிகளவில் ஊக்கத்தொகை வழங்கியுள்ளார்.

சென்னை உள்ளிட்ட நகரங்களில் சன்னரக அரிசியின் பயன்பாடு அதிகமாக உள்ளது. இதற்காக ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து அரிசி இங்கு வருகிறது. அங்கிருந்துஅரிசிவரத்து குறைவாக உள்ளதால், விலை அதிகமாகி உள்ளது.

தமிழகத்தில் விளையும் 1 லட்சம் மெட்ரிக் டன் சன்னரக அரிசியை அமுதம் அங்காடி, கூட்டுறவு சங்க கடைகளில் கிலோ ரூ.30-க்கு வழங்கப்படும். தேவைக்கு தகுந்த மாதிரி அரிசியின் அளவு அதிகரிக்கப்படும். அதேபோல துவரம் பருப்பினை ரூ.130-க்கு விற்பனை செய்யவும் வழிவகை செய்துள்ளோம்.

சில குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்களுக்கு உள்ள அரிசி ஆலைகள், கடைகள் மூலமாக அரிசியை பதுக்குகிறார்கள். இதனால் அரிசி விலை உயருகிறது. அரிசி பதுக்கலை தடுப்பதற்கான வழிவகைகளை ஆய்வு செய்து வருகிறோம்.

கடந்த ஆண்டு நவம்பர் - டிசம்பர் சீசன் வரை 8 லட்சத்து 11 ஆயிரத்து 777 மெட்ரிக் டன் நெல்லை கொள்முதல் செய்தோம். அதுவே இந்த ஆண்டு 3 லட்சத்து 50 ஆயிரத்து 468 மெட்ரிக் டன் நெல்லை மட்டுமே கொள்முதல் செய்துள்ளோம். இன்னும் இரு மாதங்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

விலைவாசி உயரும்போது பதுக்கல் அதிகமாகும், இதனை தடுக்க மாவட்டம் தோறும் 7 பேர் கொண்ட குழு செயல்படுகிறது. மற்ற துறைகளும் இதனை கண்காணிக்கும். 3 மாதத்துக்கு ஒரு முறை பாமாயில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். இன்றைய தேதி வரை 2 கோடி 94 லட்சம் பாமாயில் பாக்கெட்டுகள் கையிருப்பு உள்ளது" என்றார்.

# வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக 60 பேரிடம் பண மோசடி இருவர் கைது





சென்னை மதுரவாயல், எம்எம்டிஏ காலனியைச் சேர்ந்த லட்சுமி நாராயணன் (30) என்பவர், கடந்த ஆண்டு மே மாதம் இன்ஸ்டாகிராமில் வெளியான விளம்பரத்தைப் பார்த்து, வளசரவாக்கம் முத்துமாரியம்மன் கோயில் தெருவில் செயல்பட்டு வந்த 'கோல்டன் ஸ்கைவெஸ்' என்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தைத் தொடர்பு கொண்டுள்ளார்.

அப்போது, மேற்கு ஐரோப்பிய நாட்டில் வேலை வாங்கித் தருவதாகவும், வேலைவாய்ப்பு மற்றும் வெளிநாட்டு பணி அனுமதி நடைமுறைகளுக்காக ரூ.5 லட்சம் செலவாகும் என்றும் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். இதை நம்பிய லட்சுமி நாராயணன், கடந்தாண்டு மார்ச் முதல் பல தவணைகளாக மொத்தம் ரூ.5 லட்சம் செலுத்தியுள்ளார். வேலைவாய்ப்புக் கடிதம் மற்றும் சில ஆவணங்களை அந்த நிறுவனம் அனுப்பியுள்ளது. அவற்றைச் சரிபார்த்தபோது, அவை போலியானவை என்பது தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட நிறுவனத்துக்குச் சென்று பார்த்தபோது, அலுவலகம் பூட்டப்பட்டிருந்ததுடன், சம்பந்தப்பட்டவர்களின் செல்போன்களும் அணைக்கப்பட்டிருந்துள்ளன. அவர்கள் தலைமறைவானதும் தெரியவந்தது.

இதுகுறித்து, லட்சுமி நாராயணன் அளித்த புகாரின்பேரில், வளசரவாக்கம் போலீஸார் மோசடி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். தொடர்ந்து, இந்த வழக்கில் தொடர்புடைய சென்னை எம்ஜிஆர் நகர், அன்னை சத்யா தெருவைச் சேர்ந்த வேல்முருகன் (48), கேகே நகர், சிவலிங்கபுரத்தைச் சேர்ந்த பாலன் (46) ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

மேலும், அவர்களிடமிருந்து ரூ.4 லட்சத்து 75 ஆயிரம் ரொக்கம், ஒரு கார், 3 கணினிகள் மற்றும் அவற்றின் துணை பாகங்கள், ஒரு பிரிண்டர், 2 செல்போன்கள், பணம் எண்ணும் இயந்திரம் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில், வேல்முருகன் தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து போலியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வந்தது தெரியவந்தது.

# Legal dispute stalls chief's appointment at One Stop Centre in Jahangirpuri



*The government removed the Kusum Lata, the administrator of the centre in Jahangirpuri in December last year and subsequently promoted a case worker to the post.*

*A One Stop Centre (OSC) meant to give women facing violence immediate access to counselling, legal aid and temporary shelter has been operating without a centre administrator for the past few weeks following a legal dispute over the previous chief's removal, HT has learnt.*

*The government removed Kusum Lata, the administrator of the centre operating out of Babu Jagjivan Ram Memorial Hospital in Jahangirpuri in December last year and subsequently promoted a case worker to the post.*

*But the former administrator challenged the appointment before the Central Administrative Tribunal. Asked, Kusum Lata told HT that the case was pending before CAT, which at a recent hearing, revoked the appointment of her successor.*

*She said the authorities terminated her services in December 2025 without citing any reasons. "I started working at the OSC in 2019 and ran it without any financial aid from the government. Whenever I asked for bills to be cleared, I didn't get a response. After my termination, I went to the CAT against the appointment of another administrator and my wrongful termination. CAT then asked to revoke the new hiring. The matter is going on now," she said.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.